பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 03 2025 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணி சாதனை படைத்து நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
- நாட்டில் மருத்துவ சுற்றுலா தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.
- மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் காசநோய் பாதிப்பு பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்துள்ளார்.
- வாக்காளர் அடையாள அட்டை-யுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- உலகக்கோப்பை கபடிப் போட்டியில் இன்று ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்காட்லாந்தை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்திய அணி சாதனை படைத்து நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்

இத்தாலியல் உள்ள **Turin** நகரில் நடைபெற்ற இப்போட்டியில் பதக்கம் வென்ற இந்திய அணியினர் இன்று புதுதில்லியில் பிரதமரை சந்தித்தனர்,

அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர், இது தொடர்க சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இந்த போட்டியில் வெற்றிபெற்று சாதனை படைத்துள்ள வீரர்களுக்கு தமது பாராட்டுக்களை தெரிவித்துள் கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மகா கும்பமேளா ஒரே பாரதம் – உன்னத பாரதம் என்ற உணர்வை வலுப்படுத்தி இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கும்பமேளா குறித்து மக்களவையில் இன்று உரையாற்றிய அவர், இந்த விழா ஆன்மீகத்தையும், பாரம்பரியத்தையும் இணைத்திருப்பதாக தெரிவித்தார்.

இந்தியாவின் பலத்தையும், பண்பாட்டையும் இது உலகிற்கு எடுத்துரைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் அனைத்து பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இதில் பங்கேற்றதாகக் கூறிய அவர், இதுபோன்ற விழாக்கள் தேச ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தும் என்றார்.

நதிகளின் பாரம்பரியம் தொடர்பான விழாக்களை எடுத்துரைத்த பிரதமர், இதுபோன்ற விழாக்கள் இளைஞர்களிடையே நதிகள் பாதுகாப்பு, தூய்மை போன்றவை தொடர்பான விழிப்புணர்வை அதிகரிக்கும் என்று கூறினார்.

கும்பமேளாவில் பங்கேற்றவர்களுக்கும், இந்த விழா வெற்றிகரமாக நடைபெற உழைத்தவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாக திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்,

**[]<<<>>>[]**

இந்தியாவின் மருத்துவ சுற்றுலா தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நியுசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லச்ஸனுடன் இன்று அவர் ஆலோசனை நடத்தினார்,

அப்போது பேசிய அவர், இந்தியாவில் உலக தரத்திலான மருத்துவ வசதிகள் கிடைப்பதால் சிகிச்சைக்காக வரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மருத்துவத்துறையில் அறிவு பகிர்வு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பில் நியுசிலாந்துடன் இந்தியா இணைந்து செயல்படும் என்றும் திரு ஜெ பி நட்டா கூறினார்.

**[]<<<>>>[]**

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டில் காசநோய் பாதிப்பு பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியல் காசநோய் ஒழிப்பு தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், இந்நோய் பாதிப்பை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை அரசு மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

2015-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் நோய் பாதிப்பு 17 புள்ளி ஏழு சதவீதமும், உயிரிழப்பு 21 புள்ளி நான்கு சதவீதமும் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிக்ஷய் மித்ரா திட்டத்தின் கீழ் அரசு வழங்கும் நிதி உதவி காச நோயாளிகளுக்கு பெரிய அளவில் பயனளிப்பதாக திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பேசிய நித்தி ஆயோக் உறுப்பினர் திரு வி கே பால நாட்டிலிருந்து தொழுநோய், தட்டம்மை உள்ளிட்ட ஐந்து நோய்களை, அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் முற்றிலும் ஒழிக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகக் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு காசநோய் ஒழிப்பில் வெற்றி பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

காசநோய் பாதிப்பை கண்டறிய நவீன சாதனங்களை பயன்படுத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

காசநோயை ஒழிக்க இந்தியா மேற்கொண்ட நடவடிக்கைகள் உலக நாடுகளுக்கு பயனளிப்பதாக உள்ளது என்றும் திரு. வி.கே. பால் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பொதுத்துறை வங்கிகள் இரண்டு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வாராக்கடன்களை வசூலித்துள்ளதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இது தொடர்பான நடைமுறைகளை வங்கிகள் தீவிரப்படுத்தி உள்ளதாகக் கூறினார்.

**[]<<<>>>[]**

இந்தியா – நியுசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை தொடங்கி இருப்பது இரு நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என்று மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற இந்தியா – நியுசிலாந்து பொருளாதார மன்றக் கூட்டத்தில் பேசிய அவர், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் அடுத்த பத்து ஆண்டுகளில் பல மடங்கு உயரும் என்றார்.

இக்கூட்டத்தில் பேசிய நியூசிலாந்து பிரதமர் திரு கிறிஸ்டோபர் லக்ஸக், தொழில் முனைவோருக்கு இரு நாடுகளும் சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்தி வருவதாகக் கூறினார்.

[]<<<>>>[]

நாசா விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் பாதுகாப்பாக பூமிக்கு திரும்ப பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் திரு நரேந்திரமோடி எழுதிய கடிதத்தை மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

பூமிக்கு திரும்பிய பின் சுனிதா வில்லியம்ஸ் இந்தியா வர வேண்டுமென திரு நரேந்திரமோடி அதில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய திரு ஜிதேந்திரசிங், இந்தியாவுக்கும் - சுனிதா வில்லியம்ஸுக்கும் நெருங்கிய பிணைப்பு இருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் பாதுகாப்பாக பூமிக்கு திரும்ப வேண்டுமென நாட்டு மக்கள் அனைவரும் விரும்புவதாக அவர் கூறினார்.

நாட்டின் விண்வெளி பொருளாதாரம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் இது ஐந்து மடங்கு உயரும் என்றும் திரு ஜிதேந்திரசிங் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

வாக்காளர் அடையாள அட்டை-யுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இன்று புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஸ்வரன் தலைமையில் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.,

இது குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியல் சாசனம், மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், உச்சநீதிமன்ற உத்தரவு ஆகியவற்றின் அடிப்படையில் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய தனித்துவ அடையாள அட்டை ஆணையம் மற்றும் தேர்தல் ஆணையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு இடையேயான ஆலோசனைகள் விரைவில் தொடங்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரே எண்ணுடன் இருவேறு நபர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை வழங்கப்பட்டது தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது, வாக்குச்சாவடி மையங்களை அதிகரிப்பது மற்றும் தேர்தல் தொடர்பான பல்வேறு சவால்கள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறையால் ஏற்படும் நன்மைகள் குறித்து தமிழகத்தின் வேலூரில் நடைபெற்ற இளைஞர் நாடாளுமன்ற விழாவில் மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

நேரு யுவகேந்திரா சார்பில் நடைபெற்ற இந்த விழாவில் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

ஒரே நாடு – ஒரே தேர்தல் நடைமுறை செலவை குறைத்து வளர்ச்சியை அதிகரிக்கும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - மாணவர்கள் ) --- 36 செகண்ட்*

**[]<<<>>>[]**

நாக்பூரில் அமைதியை நிலைநாட்ட மகாராஷ்டிரா அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அம்மாநில சட்டப்பேரவையில் இன்று விளக்கம் அளித்த அவர், அரசு நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

வன்முறையின்போது மூன்று அதிகாரிள் உட்பட 33 காவல்துறையினரும், பொதுமக்கள் ஐந்து பேரும் காயமடைந்ததாக அவர் தெரிவித்தார்.,

இது தொடர்பாக ஐந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக திரு தேவேந்திர பட்னவிஸ் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை கபடிப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஆடவர் பிரிவில் இந்தியா - ஸ்காட்லாந்து அணிகள் மோதுகின்றன.

இங்கிலாந்தில் இப்போட்டி இரவு மணி 10-30-க்கு நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா, ஆகான்ஷா, **Anahat sing** காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் பிரிவில் **Ravindu laksiri** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

***End of News***